www.Padasalai.Net www.TrbTnpsc.com

V10T

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 10

காலஅளவு : 3.00 மணி நேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்கள் - 15)

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15×1=15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .............

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

2) ''அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை''
- என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

3) சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ..............

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம்

ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

4) <u>தங்க மீன்கள் தண்ணீர்த் தொட்டியில்</u> விளையாடுகின்றன.
- இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதியின் தொகைநிலைத் தொடர்கள் முறையே ..........

அ) வினைத்தொகை, வேற்றுமைத்தொகை

ஆ) பண்புத்தொகை, உவமைத்தொகை

இ) உவமைத்தொகை, வினைத்தொகை

ஈ) உவமைத்தொகை, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை

5) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

6) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது .............

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

7) வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நூல் ..............

அ) குறுந்தொகை ஆ) நறுந்தொகை இ) புறநானூறு ஈ) நற்றிணை

8) இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ..............

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

9) இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் .......... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்.

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

10) விளாவின் இளநிலை .............

அ) குட்டி ஆ) மடலி இ) வடலி ஈ) பைங்கூழ்

11) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக:**

''கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்''

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

12) இப்பாடலின் ஆசிரியர் ............

அ) மாங்குடி மருதனார் ஆ) இளங்கோவடிகள்

இ) பெருஞ்சித்திரனார் ஈ) நல்லந்துவனார்

13) கண்ணுள் வினைஞர் என்பவர் ............

அ) நெய்பவர் ஆ) வெற்றிலை விற்பவர்

இ) ஓவியர் ஈ) எண்ணெய் விற்பவர்

14) இப்பாடல் இடம்பெறும் நூல் ............

அ) சிலப்பதிகாரம் ஆ) முல்லைப்பாட்டு

இ) மலைபடுகடாம் ஈ) பரிபாடல்

15) பாடலில் இடம்பெறும் இயைபுத்தொடை ............

அ) கண்ணுள் - பொன்செய் ஆ) துன்ன காரரும் - கிழியினும்

இ) கிழியினும் - கிடையினும் ஈ) நன்கலம் - துன்னரும்

## பகுதி - II (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4×2=8**

16) குறிப்பு வரைக - அவையம்.

17) **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

அ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்.

ஆ) நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து ஆகும்.

18) வசன கவிதை - குறிப்பு வரைக.

19) காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்களைக் கூறுக.

20) சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித்தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

21) ‘இன்மையின் ............’ எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5×2=10**

22) **பொருத்தமான நிறுத்தக் குறியிடுக:**

சேரரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன

23) **கலைச்சொல் அறிக:**

அ) Intellectual - ஆ) Ultraviolet rays -

24) **பகுபத உறுப்பிலக்கணம் தருக:** உரைத்த

25) **சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக:** கானடை

26) ‘வேங்கை’ என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

27) **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக:**

அ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

ஆ) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

28) **பழமொழிகளை நிறைவு செய்க:**

அ) உப்பில்லாப் ................

ஆ) ஒரு பானை ..................

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**

29) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக்கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டாமாகும். கரகாட்டத்தின் துணையாட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது. ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்து ஆடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றி ஆடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக்கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளைக் கலைஞர்கள் இவ்வாட்டத்தில் ஆடிக்காட்டுவர்.

அ) மயிலாட்டம் என்பது யாது?

ஆ) மயிலாட்டத்தில் என்னென்ன அடவுகளைக் கலைஞர்கள் ஆடிக் காட்டுவர்?

இ) இவ்வுரைப் பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.

30) ''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

31) ''பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ'' - வினவுவது ஏன்?

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2×3=6**
**வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33) எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34) **அடிபிறழாமல் எழுதுக:**

அ) 'அன்னை மொழியே!' ..........' எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்.

**(அல்லது)**

ஆ) ''புண்ணியப் புலவீர் .........'' எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடல்.

### பிரிவு - 3

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**

35) நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், ''இலட்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்'' என்றார். ''இதோ சென்றுவிட்டேன்'' என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, ''என்னடா விளையாட வேண்டுமா?'' என்று கேட்டேன். என் தங்கையும் அங்கே வந்தாள். அவளிடம், ''நீயும் இவனும் விளையாடுங்கள்'' என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.

இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

36) எடுத்துக்காட்டு உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

37) ''அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்''.

- **இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.**

## பகுதி - IV (மதிப்பெண்கள் - 25)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5×5=25**

38) அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) **'சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்' என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக:**

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசைதொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே வணக்கம். இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியை பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி .......... தண்டலை மயில்கள் ஆட .......... இவ்வுரையைத் தொடர்க!

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

39) அ) மாநில அளவில் நடைபெற்ற கலைத்திருவிழாப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41) திருவள்ளுவர் தெரு, கதவு இலக்கம் 70, சிவகாசியில் வசிக்கும் பாண்டியன் என்பவரின் மகள் நந்தினி என்பவர் சிவகாசி பொது நூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தம்மை நந்தினியாகப் பாவித்து படிவத்தை நிரப்புக.

42) அ) மாணவர்களாகிய நீங்கள் பள்ளியிலும் வீட்டிலும் நடந்துகொள்ளும் செயல்களை எழுதுக.

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்கவும்:**

The Golden sun gets up early in the morning and starts it bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flower's fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3×8=24**

43) அ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

**(அல்லது)**

ஆ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை.

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வாரஇதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

44) அ) ''அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்'' என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45) அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக:**

முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை. **(அல்லது)**

ஆ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு - நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக்கூறு - நூல் ஆசிரியர்.

----------

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com